Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 20 புதன்கிழமை (02-6-1993) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 186

# 2,700 ஈழ அகதிகளை திருப்பியனுப்ப இலங்கையுடன் சுவிஸ் ஒப்பந்தம்

## சில தினங்களில் கைச்சாத்து

கொழும்பு ஜூன் 2

கடந்த ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர் சுவிட்ஸர்லாந்தில் தஞ்சம் கோரிய சுமார் 2 ஆயிரத்து 70 ஈழ அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக அடுத்த சில தினங்களில் இலங்கையும் சுவிட்ஸர்லாந்தும் உடன்படிக்கை ஒன்றை பூர்த்தி செய்யவிருக்கின்றன.

கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரக ராஜதந்திரி ஒருவரை மேற்கோள் காட்டி, ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை இது பற்றிய தகவலை வெளியிட்டிருக்கிறது.

அந்த அதிகாரி மேலும் தெரிவித்திருப்பதாவது!-

★ இந்த உடன்பாட்டின்படி 2 ஆயிரத்து 700 இலங்கையர் திருப்பி அனுப்பப்படுவர். அவர்களில் 90 வீதமானோர் தமிழர்கள். ஜெனிவா சாசனத்தின்படி — மனிதாபிமான ரீதியில் இந்த நடைமுறை மேற்கொள்ளப்படும்.

★ சுவிஸிலிருந்து திருப்பியனுப்பப்படுவோர் வடக்கு -

[ 2 ஆம் பக்கம் பார்க்க ]

## இன்றும் கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 2

கிளாலி பூநகரிப் படகுச் சேவை இன்றும் வழமையான நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நொச்சிமோட்டையில் விமானக்குண்டு வீச்சு!

கொழும்பு, ஜூன் 2

வவுனியாவுக்கு வடக்கே நொச்சிமோட்டைப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் நேற்று விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

வவுனியாவின் சுற்றுப்புறங்களை நோக்கி ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இப் பகுதியில் மோதல் இடம்பெற்றதை அடுத்தே விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நேற்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

★ வவுனியாவில்

## போக்குவரத்துப் பாதை தடைசெய்யப்பட்டது?

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குச் செல்ல பொதுமக்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்ட பகுதி தடைசெய்யப்பட்டுள்ள பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

பி. பி ஸி. சிங்கள சேவை நேற்று இத்தகவலை வெளியிட்டது.

இப்பகுதியில் நேற்று முன்தினம் மோதல் இடம்பெற்றது தெரிந்ததே. [உ-6]

## திருமலை பயணமாகவிருந்த 39 அரச ஊழியர் திரும்பினர்

### கப்பலில் ஏற்ற மறுப்பு

திருகோணமலை பயணமாவதற்கென்று, நேற்றுப் பருத்தித்துறை சென்ற 70 அரச ஊழியர்களில் 31 பேர் மட்டுமே கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டனர். மிகுதி 39 ஊழியரும் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாயிற்று!

புதுவருடத்தையொட்டி திருகோணமலையில் பணிபுரியும் 200 க்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் லீவில் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். லீவு முடிந்து சுமார் ஒன்றரை மாதங்களாகியும் அவர்கள் திரும்பிச் செல்ல முடியவில்லை.

அவர்கள் கப்பல் மூலம் திரும்பிச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் எல்லோருக்கும் அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை கடந்த மாதம் 18 ஆம் திகதியும் 58 பேர் திருமலை பயணமாக ஏற்பாடாகி இருந்த போதிலும் 13 பேர் அதற்கு வாய்ப்பின்றி திரும்ப வேணடியதாயிற்று. அவர்கள் காங்கேசன் துறை வரை சென்றுவிட்டுத் திரும்பினர்.

நேற்றும் 70 பேர் கப்பலில் செல்ல ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பருத்தித்துறையில் வைத்து 31 பேர் மட்டுமே ''வாதுவ'' கப்பலில் ஏற்றப்பட்டு காங்கேசனுக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். மிகுதிப் பேர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். (அ-3)

## ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்ற எதிரணி பிரேரணை

### நாடாளுமன்றுக்கு வருகிறது

கொழும்பு, ஜூன் 1

ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றி அமைக்கும்படி கோரும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் கொண்டு வரவுள்ளன.

இது தொடர்பாக அரசமைப்பில் செய்ய வேண்டிய நகல் திருத்தத்தை சுதந்திரக் கட்சியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் கூட்டாக தயாரித்து வருவதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்

## ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்ற தொண்டா எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 2

நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றும் எந்த முயற்சியையும் தாம் கடுமையாக எதிர்ப்பதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் யோசனை எதுவும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு எதிராக தாம் வேலை செய்யப் போவதாவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கும் எந்த முடிவையும் தனிநபர் எடுக்க முடியாது என்றும் —

ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுடன் கலந்தாலோசனை நடத்திய பின்னரே இது பற்றி முடிவெடுக்கப்பட வேண்டும் என்றும் திரு. தொண்டமான் ''சண்டே ரைம்ஸு''க்கு அளித்த பேட்டியில் கூறினார்.

நாடாளுமன்ற ஜனநாயக முறை காரணமாகத்தான் இனப்பிரச்சினை ஏற்பட்டது என்றும் —

ஜனாதிபதி ஆட்சி முறை கொண்டு வரப்பட்ட பின்னரே சிறுபான்மையினர் உரிமைகள் குறித்து கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் கூறினார். (உ-எ)

## வடக்கு - கிழக்கு பிரச்சினையை விரைவில் தீர்த்து வைப்பேன்

### வெளிநாட்டுத் தூதர்களிடம் டி. பி. உறுதி

கொழும்பு, ஜூன் 2

வடக்கு—கிழக்குப் பிரச்சினையைத் தாம் விரைவில் தீர்த்து வைக்க உள்ளதாகவும்—

அதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த இருப்பதாகவும்—

ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு உறுதி மொழி அளித்துள்ளார்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு ஜனாதிபதி நேற்று முன்தினம் மதிய விருந்து அளித்தார். அங்கு தூதுவர்கள் மத்தியில் பேசுகையிலேயே இனப்பிரச்சனையை விரைவில் தீர்த்து வைக்கப்போவதாக உறுதி அளித்திருக்கிறார்.

திரு. விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் வெளிநாட்டுத் தூதுவர்களை நேற்று முன்தினம் முதன்முதலாகச் சந்தித்தார். இந்த நாடு முழுவதும் சமாதானத்தை நிலைநாட்டுவது அத்தியாவசியமானது. அந்த நோக்கத்தை அடையவே நாம் எல்லோரும் பெரிதும் விரும்புகிறோம்.—

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த நான் ஆயத்தமாக உள்ளேன்.—

சமாதானம் நிலைநாட்டப்பட்டதும் வடக்கு—கிழக்கு மாகாணத்தைப் புனருத்தாரணம்- மீள அபிவிருந்தி-செய்ய உள்ளேன் அதற்கு உங்கள் உதவியும் ஒத்துழைப்பும் தேவை—என்று திரு. விஜேதுங்கா தூதுவர்களிடம் கேட்டுள்ளார். [அ-6]

## தெ. மாகாணசபையில் ஐ.தே.க பெரும்பான்மை பலம் பெறும்

### எதிரணி உறுப்பினர் ஒருவர் ஆதரவு தருவார்?

கொழும்பு, ஜூன் 2

தென் மாகாண சபைக்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ரைட்டர் திலகசேகரா ஐக்கிய தேசியக் கட்சி நிர்வாகத்துக்கு ஆதரவளிக்க முன் வந்துள்ளார் என ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாகாணசபைக்கு ஐ.தே. கவிலிருந்து 27பேரும், எதிரணியிலிருந்து 28 பேரும் (பொது மக்கள் ஐக்கிய முன்னணி — 22, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி — 6) [illegible] என்பது தெரிந்ததே.

ஐ.தே.க. பெரும்பான்மை பெறாத போதிலும் அக்கட்சியைச் சேர்ந்த எஸ். எம். அமரசிறி அங்கு முதல்வராகப் பதவிப் பிரமாணம் செய்துள்ளார்.

எதிரணிஉறுப்பினர்ஒருவரின் ஆதரவைப் பெறுவதன் மூலம் அங்கு ஐ. தே. க. தனது பெரும்பான்மையை நிலைநாட்ட முயல்வதாகக் கூறப்படுகிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காமினி ராஜினாமா?

கொழும்பு, ஜூன் 2

மத்திய மாகாணசபை உறுப்பினர் பதவியை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயகா ராஜினாமா செய்வார் என்று சொல்லப்படுகிறது.

கட்சி நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் செலுத்து முகமாகவே அவர் இம் முடிவுக்கு வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

திஸநாயக்காவின் மனைவி சிறிமா திஸநாயக்காவும் கண்டி மாவட்டத்தில் இருந்து மத்திய மாகாணசபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. திஸநாயக்கா, நுவரெலியா மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டார். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க

# மற்றுமொரு புதிய பிரிவு

## A/L - 95 கலை, வர்த்தகம்

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் | ... | 9—10 |
| அளவையியல் | — | மனோகரன் | ... | 11—12 |
| வர்த்தகம் | — | பசில் | ... | 7—8 |
| கணக்கியல் | — | சௌந்தி | ... | 8—9 |
| தமிழ் | — | மீரா | ... | 12—1 |
| இந்து நாகரிகம் | — | பாலா | ... | 8—9 |
| புவியியல் | — | ஜோசப் | ... | 11—12 |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் | ... | 12—1 |
| கிறிஸ்தவம் | — | நிரஞ்சன் | ... | 8—9 |

ஆரம்பம்: 05 — 06 — 1993 சனி 7-00 a. m.

பாரதிதாசன் கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[சி-4783]


# 41 ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலி

மலர்வு 17 — 09 — 1987



உதிர்வு 24 — 04 — 1993

அருமைப் புதல்வன்
## சிவதாஸ் றொசான்ராஜ் (ரோன்)

எங்கள் வாழ்வின் அணையாத தீபமாய்
ஒளி வீசிய எங்கள் அன்புத் தெய்வமே
உன்னை நினைத்து அழுதழுது மனம் ஆறவில்லை
உன் அருமை அண்ணாவை தவிக்க விட்டு
எங்களிடமிருந்து எங்கே சென்றாய்?
உன் உருவம் எங்கள் மனதில்
நீங்காது நிலைத்திருக்கும்!

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.


41 ஆம் நாள் ஆத்ம சாந்தி பிரார்த்தனை 03 06-93 வியாழக்கிழமை நடைபெறும்.

உன் பிரிவால் வாடி நிற்கும்
சி. சிவதாஸ் [அப்பா]
சி. வனஜா [அம்மா]
சி. கபில்ராஜ் [அண்ணா]

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
(6229)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகு: 18—09—1957



விண்ணுலகு: 02—06—1988

செல்வன்
## கணபதிப்பிள்ளை சோதிநாதன்
(சோதி)
திதி: 06 — 06 — 1993

காலங்கள் பல வந்து கோலங்கள் பல செய்திடினும்
இதய ஓலங்கள் மாறிடுமோ - அண்ணா
உமது நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு நீங்கிடுமோ!!!
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

பிரிவால் வாடும்
குடும்பத்தினர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

பசுபதியார் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
(6230)

# புராண படன பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 2

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் தொடர்ந்து நடைபெற்று வந்த பெரிய புராண படனம் இன்று புதன்கிழமை பூர்த்தி அடைகின்றது.

புராண படனம் பூர்த்தி விழா இன்று காலை 8 மணிக்கு தேவஸ்தான புராண படன மண்டபத்தில் இடம் பெறும். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் விழாவில் நல்லை ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும், சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்களும் ஆசியுரை வழங்குவார்கள். பௌராணிகர்கள், புராணம் வாசித்தோர் ஆகியோர் விழாவில் கௌரவிக்கப்படுவார்கள். [அ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 2

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவிலில் தைபூசம் முதல் இடம்பெற்று வந்த கந்த புராண படனம் நாளை வியாழக்கிழமை நிறைவுறுகிறது. அதனையொட்டி விசேட அபிஷேகம் பூசை என்பன நடைபெறும். [அ]

## 2,700 ஈழ அகதி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிழக்கு மாகாணத்தில் சண்டை நடைபெறும் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட மாட்டார்கள்.

★ அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் சாதாரண முறையில் கண்காணிக்கும்.

★ ஆரம்பத்தில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினரான இலங்கையரையே — சில டசின் எண்ணிக்கையானோரையே — சுவிஸ் திருப்பி அனுப்பும். பின்னர் 200 முதல் 300 என்ற அடிப்படையில் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

★ மனிதாபிமான உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக புதிய வாழ்வை ஆரம்பிக்க, அகதிக் குடும்பங்களின் உறுப்பினர் எண்ணிக்கையைப் பொறுத்து, திருப்பி அனுப்பப்படும் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் குறைந்தது 8 ஆயிரம் ரூபா வழங்கப்படும்,

★ தாயகம் திருப்பியனுப்பி வைக்கப்படும் அகதிகளுக்கு தாயகம் திரும்பிவந்த பின்னர் பிரச்சினைகள் ஏற்படும்பட்சத்தில், அவர்கள் சுவிஸ் தூதரகம் அல்லது அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளலாம்.

★ கடந்த ஆண்டு செப்டம்பர் 2ஆம் திகதியின் பின்னர் தஞ்சம் கோரிச் சென்ற இலங்கையரில் இரு சதவீதத்தினரே உண்மையான அகதிகள். ஏனையோர் இன, மத, சமூக மற்றும் அரசியல் ரீதியில் துன்புறுத்தப்படாத காரணத்தால் அகதிகளாக உரிமை கோரும் தகுதியைப் பெறவில்லை

இவர்கள் அனைவரும் சிறந்த வாழ்க்கையைத் தேடி வந்த பொருளாதார குடியேற்றக்காரர்களே.

★ 1983 இல் இருந்ததிலும் பார்க்க இலங்கையின் தற்போதைய நிலைவரம் சிறந்ததாக உள்ளது.

பொஸ்னியா போன்ற பிரச்சினைப் பகுதிகளில் இருந்து வரும் கூடுதலான அகதிகளுக்கு சுவிட்ஸர்லாந்து இடமளிக்க வேண்டியுள்ளது.

★ பொருளாதார சுபீட்சத்தை எதிர்பார்த்து வரும் இலங்கையருக்கு உரிய சரியான இடம் சுவிஸ்நாடு அல்ல என்று சுவிஸ் அரசு தெளிவான சைகையை காட்டியுள்ளது. ஆகவே சுவிஸுக்கு வருவதற்காக காணிகளை ஈடு வைத்து நிறையப் பணம் செலவுசெய்து வருவோர் [illegible] இவ்வாறு அந்த சுவிஸ் ராஜாங்கத்திரி தெரிவித்தார்.

(உ-எ)


# புதுக்கடை திறப்புவிழா

அன்புடையீர்,

நிகழும் ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 20ஆம் நாள் (02-06-1993) இன்று புதன்கிழமை காலை 6.10 மணி முதல் 8.00 மணி வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

## முகுந்தாஸ் புடவை மாளிகை

எனும் ஸ்தாபனம் திறந்து வைக்கப்பட இருப்பதால், மேற்படி திறப்பு விழாவுக்கு அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

சுப்பிரமணியம் முருகானந்தம்

இல. 02, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.
[25937]


ஏழாலை தெற்கு, களபாவோடை
வசந்தநாகபூஷணி அம்மன்
# வருடாந்த விசாகப் பொங்கல் பெருவிழா

காலம்: 3 6-93 வியாழக்கிழமை

அதிகாலை 4.00 மணிக்கு ஆரம்பித்து காலை 10.00 மணி வரை அடியார்கள் பொங்கல் செய்யலாம்.

விசேடபூசை காலை 10.00 மணி

தொடர்ந்து அடியார்களின் காவடி, பாற்செம்பு, அங்கப்பிரதட்சணம் என்பவற்றுடன் அம்பாளின் வீதி உலா இடம்பெறும்.

நண்பகல் 1.00 மணி: அன்னதானம்

தேவஸ்தானம்

[சி-5202]

# வேள்வி விழா

கீரிமலை கருகம்பனை கவுணாவத்தை வைரவர் கோவில் பொங்கல் வேள்வி விழா இவ்வாண்டு பிரான்பற்று சந்திக்கருகாமையில் வைரவப் பெருமானின் படத்தை வைத்து 12-06-93 அதிகாலை இடம்பெறும்,

நேர்த்திக்காக வரும் கோழிகள், ஆட்டுக்கடாக்களுக்கு மஞ்சள் நீர் தெளித்து பூசை செய்யப்படும்.

மு. செல்லக்குட்டி
ஆலய முகாமையாளர்

(சி 5021)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

# பதவிகள் வெற்றிடம்

1. கணக்காளர் — பதவி — [தற்காலிகம்]

சம்பளம் — 1305 — 60X04 — 75X11 = 2370. இல. 104 : 8 [புதிய சம்பளத் திட்டம்]

தகைமைகள்: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபம் இல. 108 81ன் கணக்காளர் இல 104 / 6 இற்கு கோரப்பட்ட தகைமைகள்.

2. களஞ்சியப் பொறுப்பாளர் — பதவி — [தற்காலிகம்]

சம்பளம்: இல: 202 : 11 (புதிய சம்பளத் திட்டம்) 905 — 40 X 5, 50 X 10 = 1605

தகைமைகள்: கூட்டுறவு வேலை ஆணைக் குழு சுற்று நிருபம். இல. 108/81இல், களஞ்சியப் பொறுப்பாளர் இல. 202 / 9 இற்கு கோரப்பட்ட தகைமைகள்.

இரு பதவிகளுக்கும் வயதெல்லை: 18 — 40 வயதுக்குட்பட்டவர்கள்

பிணை: நேரில் அறிவிக்கப்படும்

விண்ணப்ப முடிவு திகதி: 15 — 06 — 1993

அனுப்ப வேண்டிய முகவரி:

தலைவர்,
யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். [வ-து]
இல. 111, பிரதான வீதி.
யாழ்ப்பாணம்.

குறிப்பு: கல்வித் தகைமைகள், ஏனைய விவரங்கள் சமாச பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-4784)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழக சட்ட-ஒழுங்கு நிலைமை நாட்டுக்கு கவலை தருகிறது

## புதிய ஆளுநர் மக்களுக்கு உரை

சென்னை, ஜூன் 2

தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு நிலைமை நாடு முழுவதிற்கும் கவலை அளிப்பதாக உள்ளது.

தமிழகத்தின் புதிய ஆளுநர் டாக்டர் எம். சென்னா ரெட்டி, மாநில மக்களுக்கு வானொலி மூலம் ஆற்றிய உரையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் பல பிரச்சினைகள் இருப்பதைத் தாம் அறிந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

பிரச்சினைகளை முழுமையாக அறிந்து கொள்ள தமிழக மக்கள் ஒத்துழைப்பார்கள் என்று தாம் நம்புவதாகவும் அவர் கூறினார்.

காவிரி பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும் என்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஓ-எ)

## கிளிநொச்சியில் ஆய்வு வட்டம்

கிளிநொச்சி, ஜூன் 2

சமகால பொருளாதார நெருக்கடிகளை சீர்செய்யும் நோக்குடன் கிளிநொச்சியிலே ஆய்வு வட்டம் என்னும் பெயரிலே மாதாந்த அமர்வுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடத்தி வருகின்றது.

இந்த அமர்விலே துறைசார் நிபுணர்கள், விவசாய பீட விரிவுரையாளர்கள், துறைத் தலைவர்கள், கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு தீர்வுகளை ஆராய்கின்றனர்.

கடந்த மாதம் நடைபெற்ற அமர்விலே பயிரும், பயிர் அபிவிருத்தியும் எனும் விடயம் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டது. சமீபத்தில் நடைபெற்ற அமர்வில் நிலம், நீர், மக்கள் முயற்சி எனும் விடயம் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டது

எதிர்வரும் ஆய்வு வட்ட அமர்விலே சமீபத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஆய்வுக்குள்ளாக்கப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது [ஓ]

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பின்போடப்பட்டுள்ளது

யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கல்லூரி விரிவாக்க நிதிக்காக எதிர்வரும் 06 - 06 - 1993 இல் நடத்தவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நிகழ்ச்சி தவிர்க்கமுடியாத காரணத்தினால் பின்போடப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம். மேற்படி சீட்டிழுப்பு 03 - 07 - 1993 (சனி) அன்று காலை 10-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

குறிப்பு: 25-06-93 (வெள்ளி) பி.ப. 6 00 மணி வரை இச் சீட்டுக்களை விற்பனை செய்யலாம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/சாவ. இந்துக் கல்லூரி.

(25932)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்; | மறைவு: |
|---|---|
| 17 | 02 |
| — | — |
| 05 | 06 |
| — | — |
| 1930 | 1988 |

அமரர்
சி. வி. மா. தில்லையம்பலம் தேவதாசன்
(வில்வராசா)
(மிருக வைத்தியர் - அராலி, வட்டுக்கோட்டை)

அன்புக்கும் பாசத்திற்கும் உரிய அன்பு அப்பா! ஆண்டுகள் ஐந்து சென்றாலும், உங்கள் பிரிவால் ஆறாத் துயரில் வாடுகிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லண்டனில் வசிக்கும் மனைவி
திருமதி சிவானுகூலம் தேவதாசன்,
(முன்னாள் தாதி, பண்ணை ஆஸ்பத்திரி,
யாழ்ப்பாணம்.)

மக்கள்:
தே. சிவதாசன் (லண்டன்),
தே. உமாதாசன் (லண்டன்)
தே. மதிதாசன் (லண்டன்)
தே. சிறிதரதாசன் (லண்டன்),
தே. இலம்போதரன் (லண்டன்),
மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

No. 60, Montague Road,
Hanwell W 7,
London,
U. K.

தே. உமாதாசன்,
30/1, 3ஆம் ஒழுங்கை,
கண்டி வீதி, அரியாலை.

(25918)

## காஞ்சிமாமுனிவர் நூற்றாண்டுவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 2

காஞ்சிமாமுனிவர் ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் நூற்றாண்டு விழாவை இலங்கை சைவ மன்றம் எதிர்வரும் 4ஆம் திகதி புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் கொண்டாடவிருக்கின்றது.

அன்றைய தினம் காலை 11 மணிக்கு 108 நாமாவளி ஓதி அர்ச்சனை செய்யப்படும். இலங்கை சைவமன்றத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையில் யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகநாதன் ஞானக்குமார் சுவாமிகள் பற்றிச் சிறப்புரை நிகழ்த்துவார்.

(க)

## பொருட்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலையினால் நடத்தப்பட்டு வரும் கணித பொருட்காட்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 10மணிக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகத்தால் திறந்து வைக்கப்பட்டது.

மாணவர்கள் பலரும் கண்காட்சியைப் பார்வையிட்டு வருகின்றனர். இன்றும் காலை 9 மணி முதல் மாலை 5மணி வரை பொருட்காட்சி நடைபெறும்.

(க)

## தீக்குளிப்பு

கொழும்புத்துறை, ஜூன் 2

யாழ். புங்கங்குளம் வீதியில் கோவில் கொண்டிருக்கும் வில்லையடி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் அண்மையில் நடைபெற்றது.

அன்றைய தினம் நாட்டில் அமைதி, சமாதானம், சுபீட்சம் ஏற்படவும் இராணுவ நடவடிக்கைகள் ஒழியவும் ஆலய முன்றலில் தீக்குளிப்பு நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

(த-30)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

வெளிவாரி
கற்கை நெறி
1991/92

பொதுக் கலைமாணி பகுதி 1, வர்த்தகமாணி பகுதி 1, மாணவர்களுக்கு முன்னர் நடைபெறாத பொருளியல் (ECN 2.1 Micro Economics & ECN 2 2 Macro Economics) வழிகாட்டல் வகுப்புக்கள் 04-06-1993 வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு [illegible] பெறும்.

— பதிவாளர்.

(சி-5181)

## கொழும்பில் 3 நாட்கள் சாகித்திய தமிழ்ப் பெருவிழா

கொழும்பு, ஜூன் 2

1993க்கான சாகித்திய விழா எதிர்வரும் ஜூலை 16, 17, 18ஆம் திகதிகளில் கொழும்பில் தமிழ்ப்பெருவிழாவாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை இந்துக்கலாசார அலுவல்கள் அமைச்சர் பி. பி. தேவராஜ் மேற்கொண்டு வருகின்றார்.

முதல் நாள் நிகழ்ச்சிகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இறுதிநாள் நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி விஜேதுங்கவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள்.

(ஓ-எ)

## தேசிய அடையாள அட்டை 3 வாரங்களில் கிடைக்கும்

தேசிய அடையாள அட்டைகளை மூன்று வாரங்களுக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொதுமக்களிடம் இருந்து கிடைத்த பெருவாரியான புகார்களை அடுத்தே திணைக்களம் இந்நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-எ)

## விவசாயிகளுக்கு அறிமுக அட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 2

தற்போது அரசினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையானது விவசாய உள்ளீடுகளின் கிடைப்பனவு, கடன் பெறுவனவு, சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் பெரும் பாதிப்பினைக் கொண்டுவந்துள்ளது. இவ்வாறான பாதிப்புகளிலிருந்து விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கில் அவர்களுக்கு விவசாய அறிமுக அட்டையினை வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் செய்து வருகின்றது.

இதனூடாக உரப்பசளை, எரிபொருள், விதைதானியம், விவசாய உபகரணங்கள் போன்ற விவசாய உள்ளீடுகளும் விவசாயக் கடன்களும் உரிய முறையில் விவசாயிகளைச் சென்றடையும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்றும் —

விவசாயிகள் அனைவரும் பயன்பெற வேண்டுமாயின் இந்த அறிமுக அட்டையை வைத்திருப்பது அவசியமாகும் என்றும் —

இந்தவிவசாய அறிமுக அட்டையை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை கிராமிய உற்பத்திக்குழு தொடர்பாளர் அலுவலகங்களிலும், கோட்டச் செயலகங்களிலும் பெற்றுக் கொள்ளுமாறும் — தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் கோரி உள்ளது.

(இ

## மத்திய அரசாங்கத்தின் கீழ் தாதிச்சேவை வர வேண்டும்

### இல்லையேல் போராட்டம் நடக்கும்

வைத்திய சேவை மத்திய அரசின் கீழ் செயற்பட்டு வருகிறது. அதேசமயம் தாதிச் சேவை மாகாண சபைகளின் நிருவாகத்தின் கீழ் உள்ளது. இது பொருத்தப்பாடற்றது. எனவே தாதிச் சேவையையும் மத்திய அரசின் கீழ் கொண்டு வர வேண்டும்.

அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்காவிடில், நாம் தொழிற்சங்க ரீதியாகப் போராட்டத்தில் ஈடுபட நேரிடும்.

இவ்வாறு எச்சரித்துள்ளார் தாதியர் சங்கத்தின் தலைவர் வண. மொரந்தெகட்டுவே ஆனந்ததேரர்.

தாதிச் சேவை மாகாண சபையின் கீழ் உள்ளதால், கடந்த காலங்களில் எமது உறுப்பினர்கள் பல அசௌகரியங்களைச் சந்திக்க நேர்ந்தது. வைத்தியர்களுக்குரிய சலுகைகள் தாதியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்— என்றும் ஆனந்ததேரர் வலியுறுத்தியுள்ளார்.

(ஓ-6)

## வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

### முக்கிய அறிவித்தல்

எமது சமாசத்தினால் இன்று (02 - 06 - 1993) புதன்கிழமை நடைபெற இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் நிறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் (16 - 06 - 1993) புதன்கிழமை சீட்டிழுப்பு நடைபெற்று, முடிவுகள் (18 - 06 - 1993) பத்திரிகைகளில் வெளியிடப்படும். அதுவரை சீட்டிழுப்புக்கான டிக்கெட்டுகள் விற்பனை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆதரவிற்கு நன்றி:

சூசை எட்வேட், தலைவர்.
(சி-5199)
ச. அன்ரன் இராசநாயகம், செயலாளர்.

## NEW SCIENCE HALL

Kannathiddy Road, Jaffna.

95 A/L

புதிய பிரிவு

PURE / APPLIED } MATHS

திரு. ஞானதாஸ் (B. Sc.)

Sat. / Sun. } 3 30 — 5-30

ஆரம்பம்: 05 - 06 - 1993

(சி-5196)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவமுடையோர்க்கே தரிசிக்க வாய்ப்புடைய கும்பாபிஷேகம்

கும்பாபிஷேகம் காண்பது கோடி புண்ணியம். மற்றைய சாதாரண விழாக்கள் போலல்லாது பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை எடுக்கப்படும் இப்பெருவிழா, தவமுடையோர்க்கே தரிசிக்க வாய்புடைத்து.

மூர்த்தியின் அருட் பிரவாகத்தை மீண்டும் பெருகச் செய்வதே இதன் உட்கருத்து.

அதுவும் பராசக்தியான அம்பாளுக்கு நாமாற்றும் கைங்கரியங்களின் மேன்மை விளக்கற்கரிது.

சக்தி இல்லையேல் சிவம் இல்லை. அனைத்துயிர்களுக்கும் அன்னை பராசக்தி.

தாயன்புக்கிணையேது?

எமது பிழைகளை எல்லாம் பொறுத்தருளும் கருணாம்பிகை அவள்:

மனச்சிதறலில்லாது திரிசரண சுத்தியோடு அவளின் திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டால் எம்மைப் பற்றவரும் துன்பங்கள் பொசிந்து விடும் — இக்கூற்று நல்ல அனுபவத்தினால் உணர வேண்டியதொன்று.

அவளைச் சரணடைந்து உய்வு பெற்ற அடியார்கள் பலர். மகான் ஸ்ரீராமகிருஷ்ணர் போன்ற சக்தி உபாசகர்களின் உண்மைச் சரிதைகள் இதற்குச் சான்று பகர்வன.

இன்றைய பெருவிழா சிறப்புற, நிறைவுற உழைத்த அனைவருக்கும் அம்பாளின் திருவருளை வேண்டி உளமார்ந்த ஆசிகளைத் தெரிவிக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

— ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் —
(ஆதீன முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

## வரலாற்றுப் பெருமையும் தொன்மையும் மிக்க திருப்பதி

சிவத்தின் கருணையே அருட்சக்தி என்று ஆகம நூல் கூறுகிறது. அந்த அருட்சக்தி பிரபஞ்சத்தை இயக்கிக்கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்தில் உள்ள தாவர சங்கம பொருள்கள் யாவற்றிற்கும் அருட்சக்தி தாயாக விளங்குகிறது.

சொரூபத் திருமேனியாகிய இறைவியை தடத்தத் திருமேனியாக வேண்டுவதே கும்பாபிஷேகம். ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஆலயங்களை அமைத்து, விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து, கிரியை நெறிகளை வழுவாது செய்து சகல நலன்களையும் அதன் வாயிலாகப் பெறக் கூடியதாக அமைகிறது. அத்தகைய ஆலய மகா கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பது மானுடப் பிறவியின் பெரும் பயனாகும்.

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் புண்ணிய பூமியாகிய அராலி ஆவரம்பிட்டிப் பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்து வருகின்றாள்.

ஊருக்கு அழகு கோயில் என்பது முதுமொழி.

ஆலயங்கள் பல அழகு செய்ய விளங்குவது அராலிப் பதியாகும். அப்பகுதியில் உள்ள ஆலயங்களில் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் மிகப் பெருமைவாய்ந்த சக்தி ஆலயங்களில் மிகத் தொன்மை வாய்ந்ததும் வழிபாட்டு மரபில் மிக நீண்ட வரலாற்றுப் பெருமையுடையதுமான அருவத் திருமேனி கொண்டு அருள்பாலிக்கும் திருக்கோயிலாகும். இவ்வாலய மகாகும்பாபிஷேகம் திருவருள் முன்னிற்க சிறந்த வகையில் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. பூரண கிருபையுடன் பொலிவுறும் இவ்வாலய மகா கும்பாபிஷேகத்தைக் கண்டு களிக்கப் பேரார்வத்துடனிருக்கும் தொண்டர்கள், நிர்வாக அன்பர்கள். பொருளுதவிய தர்மசீலர்கள் யாவருக்கும் இந்த நன்நாளில் எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் திருவருளால் சகல நலன்களும் பெற்று இனிது வாழும் வண்ணம் அம்பிகையின் பாதார விந்தங்களைத் தியானித்து நல்லாசி கூறுகின்றேன்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

பிரதிஷ்டா கிரியா ஞானசாகரம்
சிவஸ்ரீ ச. பா வைத்தியநாத சிவாசாரியார்
ஊரெழு

## அருளாட்சி செய்யும் அம்பாள்

மனிதனாகப் பிறந்தவனுக்கு எத்தனையோ கடமைகள் உள்ளன. ஆலயங்களை மையமாக வைத்து வழிபட்டுப் பெருமையடைவதும், அதன் மூலம் மனித சமுதாயத்தை நேசித்து அறக்கருமங்களில் ஈடுபடுவதும் தலையாய கடமையாகும். பக்தியும் பண்பாடும் ஒன்றிணைந்து வாழ்வதற்கு ஆலயங்களே வழி காட்டுகின்றன.

எமது நாட்டில் அருள் ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் ஆலயங்களில் அம்பாள் ஆலயங்களும் மிகப்பலவாகும்.

இவ்வகையில் அற்புதத் தெய்வமாக அருளாட்சி புரிந்து வருபவள் அராலி முத்துமாரி அம்பாள். பசியும், பிணியும், பகையும் நீங்கவும் வசியும் வளனும் வாழ்வும் பெருகவும் அராலி வாழ் மக்களின் கண்கண்ட தெய்வமாக நின்று அருள்மாரி பொழிபவள் இத்தேவி. இதனாலேயே ஆண்டுகள் சில ஓடினாலும் அசைவற்ற கருங்கல் திருப்பணியை நிறைவேற்றி ஆனந்தம் காண்கின்றனர் அராலிவாழ் மக்கள்.

அறிவும் ஆன்மீகமும் இணையும் போதுதான் இத்தகைய திருப்பணிகள் நிறைவேறுகின்றன. எனவே ''அவள் தந்த ஆக்கம் இவ்வுலகமெல்லாம்'' என்ற உண்மையை உணர்ந்து அன்னை முத்துமாரியை வழிபட்டு குடமுழுக்கினால் உள்ளங் குளிர்ச்சியடைந்து அமைதியுறுவோமாக!

தங்கம்மா அப்பாக்குட்டி —
(தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை)

## திருவூஞ்சற் பா

நயங்குலவு மந்தணர்மா மறைகளோத
நற்றமிழின் பெருமறைகள் பத்தர் பாடச்
சயங்குலவுஞ் சிவநாம மெங்குங் கூடச்
சாதுசன சங்கநெறி நன்குநீட
வியங்குலவு திருப்பணிகள் பலவுஞ் செய்வோர்
விழவினோடு பூசனைசெய் வோர்கணங்கு
வயங்கியவா வரம்பிட்டி வாழ்வு செய்யும்
மகாமுத்து மாரியம்மே யாடீருஞ்சல்.


கேட்டிடும் வரங்கள் ஈந்திடும் அன்னை
பெருவிழாதனைக் கண்டு பெருமகிழ்ந்திடுவோம்.
யோகாஸ் பிடைவை மாளிகை
இல. 16B, பெரிய கடை, யாழ்ப்பாணம்.


# அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீமுத்...
## ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன ...
# ★ மகாகும்பாபி...

02-06-19...

## அருவத் திருமேனி கொண்...
## ஆதி அன்னை அராலி ஆ...

ஈழவள நாட்டின் வடபால் அமைந்துள்ளதும், இதன் சிகரமென அழைக்கப்படுவதுமாகிய யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குப் பகுதியில் யாழ்ப்பாண நகரில் இருந்து கல்லுண்டாய் வழியாக காரைநகர் செல்லும் வீதியில் வழுக்கை ஆற்றுப் பாலத்தை கடந்ததும் வருவது தான் அராலிக் கிராமமாகும். இது யாழ்ப்பாண மாநகரில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் அமைந்திருக்கின்றது. அராலிக் கிராமத்தின் கிழக்குப் பக்க முகப்பில் காவல் தெய்வம் போன்று முதலில் அமைந்திருக்கும் திருக்கோயில் தான் அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானமாகும்.

ஈழத்து வரலாற்றுப் புகழ் பெற்ற பழம் பெரும் சக்தி ஆலயங்களுள் இந்த ஆலயம் முதன்மை பெற்ற ஒன்றாகும்.

இலட்சணப்படி நிர்மாணிக்கப் பெற்ற திரிதள விமானமும் கொண்டு அமைவுற்ற கோயில் இத் திருக்கோயிலாகும். இது எமது ஊர் வாழ் ஸ்தபதிகள், சிற்பாசாரியர்களின் சிறப்பு மிக்க கலைவண்ணத்திற்கு சிறந்த ஓர் எடுத்துக் காட்டாக எக்காலமும் நிலை பெற்றிருக்கும் பெருமை உண்டு.


### பூர்வீக வரலாறு

இத்தலத்தின் வரலாறு மிகப் பூர்வீகமானது. இவ் வரலாறு பற்றிப் பல ஐதீக, கர்ணபரம்பரைக் கதைகள் உள்ளன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பொன்னாலைக் கடற்பரப்பில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த ஒரு மீனவனின் வலையில், பொன்நிறம் பொருந்திய ஆமை, சிலம்பு, பிரம்பு ஆகிய மூன்றும் சிக்கியதாக

அன்னை பராசக்திக்கு நித்திய பூசைகளும் நைமித்திய பெருவிழாக்களும் நடைபெற்று வந்தன. இந்த ஆலயத்தில் நடைபெறும் விழாக்களில் வைகாசி மாதத்தில் ஒன்பது தினங்களுக்கு நடைபெறும் மஹோற்சவம், நவராத்திரி, திருவெம்பாவை, தை மாதத்தில் வரும் இரண்டாவது சனிக்

துடன் ... வது ... பெரு... கொடி... நிறை...

... இவ்... பெறு...



அராலி அம்...

### அம்பிகை

அருவமாய் நின்ற தேவி ஆதி சக்...
நானிலம் காக்கவென்றே நாவலி...
நல்லடியார் வினைகளையும் நா...
அருளோங்கும் ஆவரம்பிட்டியுறை...

## வழிபாட்டு, கொடியேற்ற முறைகளில் தனித்துவம்

இங்கு அம்பாள் அருவத்திருமேனி கொண்டு அருள் ஒளி பரப்பி நிற்கும் தன்மை அதி உன்னதமானது, அற்புதமானது. இவ்வருள் தெய்வத்திற்கு எமது அராலியூர் ஸ்தபதிகள், சிற்பாசாரியார்கள் ஒன்று சேர்ந்து அம்பிகை அடியார்களின் உதவியுடன் பல லட்ச ரூபா செலவில் சிற்ப சாஸ்திர முறைப்படி அருட் பொலிவும், கலைப்பொலிவும் நிரம்பப் பெற அதி அற்புதமாக அமைத்த கருங்கற் கோயிலாக இப்போது விளங்குகிறது.

ஈழநாட்டிலே மிக அரிதாக அமைக்கப் பெற்றுள்ள கருங்கற் கோயில்களில் திராவிடக் கோயிற் கட்டடக் கலையின் சிறப்பு மிக்க சிற்ப சாஸ்திர முறைகளான இரட்டைப் பஞ்சாங்க, முகபத்திர வேலை அமைப்புகளையும், கொண்ட கர்பக்கிருகமும், அர்த்த மண்டபமும், செய்ங்கள விமான

வும் அவற்றை வன் கரையில் சேர்ப்பித்ததாகவும் அவற்றில் சிலம்பும், பிரம்பும் அவ்விடத்தை விட்டு அராலி மேற்கில் உள்ள நெச்சியம் பதி ஊடாக அராலி கிழக்கு ஆவரம்பிட்டிப் பதியில் ஓர் நாவல் மரத்தடியில் நிரந்தரமாக நிலைகொண்டு மக்களால் பக்தி சிரத்தையோடு வணங்கப்பட்டு வரப்பட்டதாகவும், பின் இந் நாவல் மரத்திற்கு அருகில் அம்பிகைக்கு செங்கற்களாலான ஆலயம் ஒன்று நிர்மாணிக்கப் பெற்றது என்றும் ஒரு தகவல் உண்டு. திரு. கந்தையா பிள்ளை என்பவரால் பாடப்பட்ட இத்தல வரலாறு பற்றிய பாடல்களில் இருந்து இத்தகவலை அறியக் கூடியதாக இருக்கிறது.

இவ்வாறாக அமைக்கப் பெற்ற திருக்கோயிலில் அருவத்திருமேனி கொண்டு அருள் பாலிக்கும் ஆதி சக்தியாம்

கிழமையில் நடைபெறும் வேள்வி என்பன சிறப்பு மிக்க பெரு விழாக்களாகும். இங்கு நடைபெறும் மஹோற்சவம் வைகாசி விசாக நட்சத்திரத்திற்கு முதல் வரும் வெள்ளிக் கிழமையன்று கொடியேற்றத்

மான... உள்... கொடி... யேற்... வெள்... மூல... என்...


ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ
புடைவை வியாபாரிகள்
13, 14, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

திருக்குடத் திருமஞ்சனப் ...
ஆவரம்பிட்டி நாவல...
அருளை இறைஞ்...

மகாராணி ரெக்ஸ்ரைல்
50, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

லிங்கம்ஸ் ஹவுஸ்
6, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்
172, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பஷன் ஹவுஸ்
65, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ...

க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
(மருந்துச் சரக்கு வியாபாரம்)
76, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

இந்திரன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
101, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சிவசம்பு களஞ்சியம்
(பல் பொருள் விற்பனை நிலையம்)
இல. [illegible], மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

வளர்மதி ரெக்ஸ்ரைல்
375, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

271/1...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ீமுத்துமாரி அம்பாள் ஆலய
## ்தன பிரதிஷ்டா நவகுண்ட மகாயாக
## ாபிஷேக மலர் ★

—06—1993


# காண்டு அருளாட்சி புரியும்
# ஆவரம்பிட்டி ஸ்ரீமுத்துமாரி

நித்திய
ய பெரு
ற்று வந்
ல் நடை
வைகாசி
தினங்க
ஹோற்
திருவெம்
த் தில்
சனிக்

துடன் ஆரம்பமாகி ஒன்பதாவது நாளான சனிக்கிழமை பெரும் பொங்கலுடனும், கொடி இறக்கத்துடனும் நிறைவு பெறும்.

### கொடியேற்றம் வித்தியாசமானது

இவ்வாலயத்தில் நடைபெறும் கொடியேற்ற உற்சவ



ராலி அம்மன்

## ம்பிகை துதி

ற தேவி ஆதி சக்தியானாய் தேவி
வென்றே நாவலில் உறைந்தாய் தேவி
னைகளையும் நாயகியே சௌந்தரியே
ஆவரம்பிட்டியுறை முத்துமாரி-
அம்பிகையே!

பெறும்
ப்பு மிக்க
ம். இங்கு
ோற்சவம்
சத்திரத்
வெள்ளிக்
யேற்றத்

மானது ஏனைய ஆலயங்களில் உள்ளே நிறுவப்பட்டுள்ள கொடிஸ் தம்பத்தில் கொடியேற்றுவது போல் அன்றி, வெளி வீதியில் தென் கிழக்கு மூலையில் அமைந்துள்ள தளட் என்னும் மண்டபத்திற்கு முன்னால் ஒரு கமுக மரத்தில் அம்பிகையின் வாகனமாகிய சிங்கத்தின் உருவம் பொறிக்கப்பட்ட கொடி நடுவிலும் அதைச் சூழ நாற்புறமும் நான்கு வர்ணக் (சிவப்பு, பச்சை, கறுப்பு, மஞ்சள்) கொடிகளும் ஏற்றப்படுகின்றன. இம் முறை ஒரு பெரும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கின்றது. இவ்வாறான கொடியேற்ற முறை நாம் அறிந்த வரையில், வேறு ஆலயங்களில் காண முடியாத இவ்வாலயத்திற்கே உரிய தனித்துவமான முறையாகக் காணப்படுகின்றது.

ஒன்பதாம் திருவிழாவான வேள்வி என்று கூறப்படும் விழாவும் வித்தியாசமானது. அன்று பெரும் பொங்கல் மடையுடன் கொடிமரத்திற்கு முன்னால் உயிர்ப்பலி இடும் வழக்கமும் , பின்பற்றப்பட்டு வந்தது. இப்போது மஹோற்சவ நிகழ்வுகளில் உயிர்ப்பலி தவிர்ந்த ஏனையவை தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

உயிர்ப்பலி இடும் முறை மட்டும் முன்னாள் தர்மகர்த்தாவாக இருந்த அமரர் திரு. அ. வ. சுப்பிரமணியம் அவர்களால் 1942 ஆம் ஆண்டில் இருந்து நிரந்தரமாக நிறுத்தப் பெற்றுள்ளது இவ் உயிர்ப்பலி நிறுத்தமானது நாம் அறிந்த வரையில் ஆலயங்களில் பலியிடும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளியிடப் படுவதற்காக முதன் முதலில் மேற்கொள்ளப்பட்ட முற்போக்கு நடவடிக்கையாக அமைகிறது எனக் கருதலாம்.

### மூலஸ்தானத்தில் அருவத்திருமேனி

இவ்வாலய அமைப்பில்குறிப்பிட்டுக் கூறக் கூடிய இன்னோர் தனித்துவமான அம்சம் மூலஸ்தானத்தில் மூலமூர்த்தி ஒன்று இல்லாது ஒரு பீடமும் அதன் மேல் தெய்வீக சக்தி வாய்ந்த கருங்கற்களும் அமைந்துள்ளமையுமாகும். இங்கு நித்திய பூசையின் போது மேற்குறித்த பீடத்திற்கே அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. இம்முறையானது அம்பிகையானவள் அருவத் திருமேனி கொண்டு அருள்பாலிக்கும் அருளாட்சியை எடுத்துக் காட்டுகின்றது.

### தனித்துவமான வழிபாட்டு முறை

இவ்வழிபாட்டு முறையில் ஆகம முறைப்படியான கிரியா மார்க்கம் இடம் பெற்றிருப்பினும் அதனுடன் பக்தி மார்க்கமும் இணைந்து ஒரு புதிய

**தலைவர்**
*ஆலய பரிபாலன சபை*

வழிபாட்டு மரபாக வளர்ந்து வந்துள்ளமை குறிப்பிடக் கூடிய ஒரு சிறப்பம்சம் மட்டுமன்றி இவ்வழிபாட்டு முறையானது ஈழத்திலோ அன்றி இந்தியாவிலோ காணமுடியாத தனித்துவமானதொன்றாகவும் விளங்குகின்றது.

கால நியதி காரணமாக இச் செங்கற்கோயில் சிதைவுகள் ஏற்படவே அம்பிகை அடியார்கள் இத் திருக்கோயிலை காலத்தால் அழியாத கருங்கற் கோயிலாக அமைக்க எண்ணி அம்பாளின் திருவருளை வேண்டி நின்றனர் இவ்வேண்டுதலுக்கு அமைய அம்பாள் திருக்கடாட்சம் கிடைக்கப்பெற்று கருங்கற் திருக்கோயில் நிர்மாண வேலைகள் 1947 ஆம் ஆண்டு முன்னாள் தர்மகர்த்தாவாக இருந்த அமரர் திரு. அ. வ. சுப்பிரமணியம் அவர்களால் அராலியூர் சிற்பாசாரியார் அமரர் திரு. வி. நாகமுத்து ஆச்சாரியார் தலைமையில் ஆரம்பிக்கப் பெற்றது. சில காலம் தடைப்பட்டிருந்த இத் திருப்பணியானது மீண்டும் அம்பிகை அடியார்களினதும், அராலியூர் சிற்பாசாரியார்களினதும் இடையறாத முயற்சியின் பயனாக 1988ஆம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# முற்றிலும் கருங்கற்களினால் அன்னைக்கு ஓர் ஆலயம்

பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள இறைவனைத் திருக்கோயில்களிலே கண்டு தரிசித்து இறையருள் பெற்றவர்கள் தமிழர்கள், ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்ற உயர்ந்த நெறியில் வாழ்ந்து உயர்ந்தவர்கள் தமிழர்கள்; அதனாற்றான் பண்டைக் காலத் தமிழ் வேந்தர்கள் தமது அரண்மனைகளை விடப் பெரிதாக ஆலயங்களை மிக அழகுற நிர்மாணித்தனர். அவ்வாலயங்கள் இன்றும் அருளொளியும் ஆன்மீக உணர்வும் பரப்பும் காலத்தால் அழியாத கலைக் கருவூலங்களாக தமிழர் பண்பாட்டின் சிறப்பினை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றன.

அத்தகைய கோயிற் கட்டடக்கலை மரபில், ஈழத்திலுள்ள மிகப்பழமை வாய்ந்த சக்தி ஆலயங்களில் ஒன்றெனச் சிறப்புற்று விளங்கும் அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு முற்றிலும் கருங்கற்களாலான ஆலயம் நிர்மாணிக்கப் பெற்று, திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழா நிகழுகிறது.

அச்ச நிலையிலும் அன்பு நிலையிலும் அருள்பாலிக்கும் இறைவி அன்னை பராசக்திக்குக் கருங்கற்களால் திருக்கோயில் அமைக்கும் திருப்பணியில் பங்குகொண்ட அனைவரையும் வாழ்த்தி, ஆதி சக்தியாம் அன்னையின் அருள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றும் எம் மக்களது துன்ப துயரங்கள் நீங்கி அன்பு, அறம், அமைதி நீடு நிலை பெற வேண்டும் என்றும் அம்பிகையைப் பிரார்த்திக்கின்றேன்.

கா. மாணிக்கவாசகர்
யாழ். அரச அதிபர்

# எமது பண்பாட்டிற்கு பெருமை தரும் கோயில்

உலகில் உள்ள உயிர்கள் அனைத்திற்கும் அன்னையாகிய அம்பிகை, அராலி ஆவரம்பிட்டியில் ஸ்ரீ முத்துமாரியம்பாளாக அருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கின்றாள்

சக்தி பீடமாகக் காட்சி தரும் இவ்வாலயத்தில் திருப்பணி வேலைகள் அம்பிகையின் திருவருள் துணை கொண்டு இக்கிராம மக்களின் கைங்கரியமாக நிறைவேறி, ஜீர்ணோத்தாரண நவகுண்டபட்ச மகா கும்பாபிஷேகம் நிகழ்வது நாம் செய்த தவப்பயனேயன்றி வேறில்லை

திருக்கோயில் வரலாற்றில் பல்லவர், சோழர் கால மன்னர்களால் சிறப்பாகப் பேணப்பட்ட கருங்கற் திருப்பணிகளை சமகாலத்தில் நினைவு கூரத்தக்க வகையில் அம்பிகையின் கருவறை விமானம், திரிதள இரட்டைப் பஞ்சாங்க, மூகபத்திர வேலை அமைப்புகளைக் கொண்ட கருங்கற் கோயிலாக அமைந்து விளங்குகின்றமை எமது பண்பாட்டிற்குப் பெருமை தேடித் தரும் விடயமாகும்.

பெருஞ் செலவினத்தை உள்ளடக்கிய இத்தகைய திருப்பணிக் கைங்கரியத்தில் ஈடுபட்ட அறங்காவற் சபையினரும் இக்கிராம மக்களும் அம்பிகையின் திருவருட் பேற்றுக்கு உரியவர்களாவர் என்பது திண்ணம்.

பழுதடைந்த கோயில் ஒன்றினை முன்போற் புதிதாக திருத்தி அமைக்கும் திருப்பணி மேன்மை வாய்ந்தது. அதில் ஈடுபடும் அடியார்களுக்கு உயர்பேறு சித்திக்கும் என்பது சைவ சாஸ்திர உண்மையாகும்.

பல வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இத்திருப்பணி இனிதே நிறைவேறி சிவாகமங்கள் வகுத்துக் கூறும் சிறந்த கிரியை மரபின் அடிப்படையில் அம்பிகைக்கு நிகழும் இம்மகாகும்பாபிஷேகத்தின் பெறுபேறாகிய அம்பிகையின் திருவருட் சக்தி பாரெங்கணும் நிலவுவதாகுக!

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்,
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## இன்றைய கும்பாபிஷேகக் கிரியைகள்

காலை 7.00 மணி விக்கினேஸ்வர பூசை, விஷேச சந்தி, பூதசுத்தி, யாகசாலாப் பிரவேசம் மகாயாகபூசை, நவகுண்ட அக்கினி பூசை ஹோமம், நவகுண்ட அக்கினி சம்யோஜனம், மகா பூர்ணாகுதி, அந்தர்பலி பகிர்பலி, பிரதக்ஷிண ஸ்தோத்திர நமஸ்க்கார வந்தனம், விஷேச தீபாராதனை, நவசக்தி அர்ச்சனை, வேதபாராயணம, ஸ்தோத்திர பாராயணம், மகாசிர்வாதம், திருமுறை பாராயணம், முகூர்த்ததானம், யாத்திராதானம்.

பகல் 11 மணி 05 நிமிடத்துக்கு மேல் சர்வமங்கள வாத்திய சங்கநாத சதுர்வேத கோஷங்களுடன் ஸ்தூலலிங்க திரிதள விமான மூலஸ்தூபி கும்பாபிஷேகம்.

பகல் 11 மணி 30 நிமிடத்துக்கு மேல் வரும் சுபமுகூர்த்தத்தில் வேத விற்பன்னர்கள் வேதம் ஓத, மங்கள வாத்தியம் இசைக்க, சங்கநாதம் முழங்க, கண்டாமணி ஒலிக்க ,நாத சதுர் வேத கோஷங்களுடன் பிரதான பரிவார கும்பங்கள் வீதிப் பிரதக்ஷிணம், மூலாலயப் பிரவேசம், அதிகாரங்க கலாசமயோசனம், ஆவாஹனம், மதுவர்க்க நிவேதனம்.

பகல் 12 மணி 53 நிமிடத்திற்குள்ளாக மகா கும்பாபிஷேகம் மகாகவிர் நிவேதனம், அகண்ட தீபம் கோதர்சனம், மங்கள தர்சனம், யாக உத்வாசனம், கர்பா வரண அபிஷேகம், தீர்த்த யாத்திரை அங்குர விஜர்ச்சனம், எஜமான் அபிஷேகம், குரு பாதபூசை குருமார் சம்பாவனை, மங்கள ஆசீர்வாதம், ஆசிஉரைகள் மகா அபிஷேகம், விஷேச தீபாராதனை, தாரிகா சண்டேஸ்வரப் பிரார்த்தனை.

பிற்பகல் 3.00 மணி விசேடபூசை, ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருவீதி உலாப் பவனி உற்சவம் நடைபெறும்.

## நாதகான மழை இன்று

இன்று கும்பாபிஷேக நிகழ்வின் போது ஈழத்தின் நாதஸ்வர, தவில் இசைக் கலைஞர்கள் பலர் கலந்துகொண்டு நாதகான மழை பொழிந்து சிறப்பிப்பார்கள்.

## கைலைவிட்டகலாதார்

புல்லினாற் பத்துக்கோடி புவிமண்ணால் நூறுகோடி
செல்லுமாங் காலந்தன்னிற் செங்கல்லா லாயிரம்கோடி
யல்லிருங் குழலாய் கேண்மோ வாலயமடங் கடம்மைக்க
கல்லினாற் செய்தபேர்கள் கைலைவிட்ட கலார்தாமே.


மஞ்சனப் பெருவிழா காணும்
நாவலடி நாயகியின்
இறைஞ்சுகிறோம்

பவி நிலா பல்பொருள் அங்காடி
(சைக்கிள் உதிரிப்பாகம்)
ஆடிய பாதம் வீதி,
நல்லூர் மார்க்கட்.

சீமாட்டி (ஜவுளி சமுத்திரம்)
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
சேர். பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்

நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்
58, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்
54, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

ரோர்ஸ்

பிள்ளையார்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பூமகள் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
99A, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்
த்தை,

கமலேஸ்வரி
களஞ்சியம்
271/18, கே. கே. எஸ். வீதி,
மைலன்ஸ் பில்டிங்,
யாழ்ப்பாணம்.

ஐங்கரன் பாமர்லி
அன் மல்ரி சென்ரர்
அராலி தெற்கு.

வலம்புரி
[அழகு சாதன விற்பனையகம்]
ஆஸ்பத்திரி முன்பாக,
வட்டுக்கோட்டை.

சோபனா ஆடையகம்
16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(விளம்பர இலக்கம்: 25921)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

4'' கொன்கிறீட் கற்கள் தேவை. தொடர்பு கொள்ள வும்: இல. 06, நல்லூர் குறுக் குத் தெரு, யாழ்ப்பாணம். (25922)

சங்கானை வடிசாலைக்குப் பாவித்த மெண்டிஸ் மூடி தேவைப்படுகின்றது. மொத்த மாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு; பொது முகாமை யாளர், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் சமாசம், சங்கானை. (6227)

### இலவச திருமண சேவை

38 வயது, அவிட்டம், U.K. M.Sc. Electrical, Electronic Engineer விவாகரத்துப் பெற் றவருக்கு படித்த மணப்பெண் தேவை இலங்கையில் திரு மணம் செய்து அழைக்கலாம். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவி லடி. (25911)

30 வயது, ஆயிலியம், செவ் வாய் 2, பிரான்ஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திரு மணம் செய்து அழைக்கலாம். மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில. விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (25912)

### மணமக்கள் தேவை

ஆயிலியம் 34, பூராடம் 31 வயதுடையவர்களுக்கு மணமகன் தேவை. அத்துடன் அவுஸ்திரேலியா, கனடா, லண் டன் ஆகிய இடங்களுக்கு செல்லக்கூடிய மணமக்களும் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ் வீதி, மல்லாகம். (5940)

### தவறிவிட்டது

31-05-93 திங்கட்கிழமை நண்பகல் அளவில் கே. கே. எஸ். வீதியில் மனோகராச் சந்திக்கும், கொக்குவில் சந் திக்கும் இடையில் ஒரு பவுண் நிறையுடைய தங்க கைச்சங் கிலி தவறிவிட்டது கண் டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்: இல 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம். தகுந்த சன்மானம் வழங்கப் படும் (25931)

### பெயர் மாற்றம்

யாழ். நகரை வசிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப் பட்டுள்ளது என்பதை சகல ருக்கும் அறியத்தருகிறேன். K. V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப் பாணம். (25587)

## உருப்பராயில் வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 2 தமிழீழத் திருவள்ளுவர் மன்றத்தினர் நடத்த ஏற்பாடு செய்துள்ள வள்ளுவர் விழா எதிர்வரும் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் உருப்ப ராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் ஊர்வலம், உரையரங்கு, கலை நிகழ்ச்சி கள் ஆகியனவும் -

இரண்டாம் நாள் திருக் குறள் ஆய்வரங்கு, உரை யரங்கு கவியரங்கு, கலை நிகழ்ச்சிகளும்—

மூன்றாம் நாள் உரை யரங்கு, பரிசளிப்பு, பட்டி மண்டபம், கலை நிகழ்ச்சி களும் நடைபெறும். (ஓ)

---

வாசகர்களின் பொது அறிவை வளர்க்கும்

## அறிவுக் களஞ்சியம் - 12

பல சுவையான செய்திகளுடன்

வெளிவந்துவிட்டது!

(சி-4782)

---

# SCIENCE COLLEGE

## விஞ்ஞானக் கல்லூரி

பெருமான் கோவில் அருகில், யாழ்ப்பாணம்.

**95 - A/L**

**ஆரம்பம்: 03-06-1993**

வியாழன் 4.30 p.m.

தூய - பிரயோக கணிதம்
திரு. குணசிங்கம் B.Sc. (Hons)

விலங்கியல்
திரு. ஈஸ்வரதாசன்
B.Sc. (Cey.), Dip-in-Ed.

★ 95 A/L ஆரம்பத்தில் இருந்து மட்டும் அனு மதி வழங்கப்படும்.

★★ 94 A/L விலங்கியல் புதிய பிரிவு ஆரம்பமாக உள்ளது.

★★★ 93 A/L Zoology Model Question Paper Class ஆரம்பமாகவுள்ளது.

★★★★ நேர அட்டவணையை நிறுவனத்தில் பெற லாம்.

- நிர்வாகி

(சி-5189)

---

## நினைவலைகளின் ஐந்தாம் ஆண்டு



தமிழீழ விடுதலைப் புலிகளின்
வடமராட்சி அரசியல் பிரிவுப் பொறுப்பாளரும்,
வடமராட்சி பதில் பொறுப்பாளருமான

### மேஜர் சலாம்

**(வ. சி. நல்லராசன் (பழம்) இமையாணன்)**

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 17 – 09 – 1956 | 02 – 06 – 1988 |

நண்ப... மேஜர் சலாம்!
எமக்கு இடித்துரைக்கும் இனிய உன் பண்பால்
எங்களின் உயிருக்கே உயிர்ப்பினைத் தந்தாய்......
தன்மான உணர்வின் உன்னதம் உகந்தாய் .....
ஏனோ தானோக்களென எமை ஆக விடாமல்
ஏற்றம் பெறவைத்தாய்; தேறுமா எம் மனம்......?
மாறுமா வாட்டும் உன் பிரிவுத்துயர்.......? நிச்சயம்
நாளை மலரும் ''நம்நாடு'' வேளை தவறாது
சொல்லும் உன் உயர் பண்பாடு.

நண்பர்கள்.

(25914)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## யாழ்ப்பாண மாநகர சபை

## துவிச்சக்கரவண்டிகளுக்கான உரிமம் 1993

1993 ஆம் ஆண்டுக்குரிய துவிச்சக்கரவண்டி உரிமம் பெறாதவர்கள் 30 - 60 - 1993க்கு முன் அவற்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் எம்முடன் ஒத்துழைத்து அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்பு டன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
மாநகர சபை அலுவலகம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்,
1993 - 05 - 31.

(சி-5198)

---

## அஸ்ரன் கல்வி நிலையம்

ஆரம்பிக்கும்

## A/L விஞ்ஞானப் பிரிவு - 95

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களின்
இணைந்த சேவை

**ஆரம்பம்: 05 - 06 - 1993**

மூற்பகல் 8.00 மணி

| | |
|---|---|
| பௌதிகவியல் / பிரயோககணிதம் | — திரு. R. மணியம் |
| விலங்கியல் | — திரு. S செல்வநாயகம் |
| தூயகணிதம் | — திரு. S. ஈஸ்வரதேவன் |
| இரசாயனவியல் | — திரு. K. ஜெயஈஸ்வரன் |
| தாவரவியல் | — பிரபல ஆசிரியர் |

★ அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ ஒவ்வொரு வகுப்பிலும் 100க்குட்பட்ட மாணவர்கள்

உறுதியான கல்வியைப் பெற

## அஸ்ரன் கல்வி நிலையம்

101/10, விறான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

[சி-4768]

---

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கந்தையா வேலுப்பிள்ளை

(யாழ். மாவட்ட முன்னாள் தொலைத் தொடர்பு பொறியியலாளர்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 17 – 02 – 1940 | 21 – 05 – 1986 |

**திதி: 02 – 06 – 1993**

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குல விளக்கே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் எம் மைப் பிரிந்து இன்றுடன் ஏழு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டாலும், உங்கள் அன்பு முகம் ஓராயிரம் ஆண்டு கள் சென்றாலும், மறையவே மறையாது. தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''வேல் அகம்'',
குருக்கட்டு, கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(6225)

## உதயன்

### வீதி விபத்துக்கள் சமூகத்தை அரிக்கும்!

யாழ்ப்பாணத்தில் சைக்கிள் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. சைக்கிள் ஓட்டிகளினதும், பாதசாரிகளினதும் அலட்சியப் போக்கினாலேயே பெரும்பாலான சைக்கிள் விபத்துக்கள் இடம்பெறுகின்றன,

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் யாழ். போதனா வைத்தியசாலையின் மூத்த வைத்திய அதிகாரியான டாக்டர் சுப்பிரமணியம் ரவிராஜ் தெரிவித்திருக்கிறார்.

விபத்துக்கள் ஏற்படுவது குறித்து மக்கள் அலட்சியமாக இருந்தால், விபத்துக்களின் பாதிப்புகளை உணர்ந்து போக்குவரத்து விதிகளை சரிவரக் கடைப்பிடிக்காவிடில், தாமே உணர்ந்து விபத்துக்களைத் தடுக்க முயற்சிக்காவிடில் குடாநாட்டில் பெரும் விபரீதங்கள் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

இவை கவனத்தில் கொள்ளப்படவேண்டிய கருத்துக்கள்.

வீதிவிபத்துக்களின் பாரதூரமான தன்மையை எமது மக்கள் உணர்வதாக இல்லை. ஒரு தனி மனிதனைப் பொறுத்த அளவில் அவன் வீதி விபத்துக்கு ஆளாகும்போது, அவனுக்கு உண்டாகும் உடற்பாதிப்பு, சில வேளைகளில் அவனுக்கு நிரந்தர தாக்கத்தை உண்டாக்குகிறது. இன்னும் பலருக்கு வீதி விபத்தே உயிராபத்தாகவும் முடிந்து விடுகிறது.

இந்த இரண்டுமே சமூக வாழ்வியக்கத்தை மிகப் பாரதூரமாகப் பாதித்துவிட வல்லவை. ஒன்று பத்தாகி, நூறாகிப் பின் பலவாகும்போது அதனால் சமூகத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பலவகைப்பட்டனவாகுகின்றன. சமூகம் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய மேலதிக பளுவும் உண்டாகிறது. அந்தப் பளுவைச் சுமக்கும் பொருட்டு பிரதேசத்தின் முக்கிய வளங்களைச் செலவிடவும் நேரிடுகிறது.

வீதி விபத்துக்களும் அவற்றின் பாதிப்புகளும் உலகளாவிய பிரச்சினைகளாகும். அதனால் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கென பல இயக்கங்களும் அமைப்புகளும் உருவாகியுள்ளன. உலகளாவிய ரீதியில் மாநாடுகளும், கருத்தரங்குகளும் நடத்தி வீதி விபத்துக்களைத்தடுப்பதற்கான வழிமுறைகள் ஆராயப்படுகின்றன; வகுக்கப்படுகின்றன.

ஆனால் உலக மக்கள் விபத்துக்களின் தாக்கங்களைப் புரிந்து கொண்டு, தாமாகவே உணர்ந்து திருந்தி நடக்காவிடில் மாநாடுகள், கருத்தரங்குகளால் எவ்வித பயனும் உண்டாகப் போவதில்லை.

எமது பிரதேசத்தில் நடக்கும் விபத்துக்கள் இலகுவில் தடுக்கக் கூடியவை. சைக்கிளோட்டிகளும் பாதசாரிகளும் உணர்ந்து கொண்டால் அவற்றில் பெரும்பங்கைக் குறைத்துவிடலாம். வீதி விபத்தால் தனக்கும் ஆபத்து, மற்றவர்களுக்கும் ஆபத்து என்பதனை ஒவ்வொருவரும் மனதார உணர்ந்தால் விபத்துக்கள் குறையும்.

அது போலவே மண்ணெண்ணெய் விளக்குகளினால் உண்டாகும் விபத்துக்கள், கிருமிநாசினிகள் போன்றவற்றால் உண்டாகும் விபத்துக்கள் தொழில் நிலையங்கள், வீடுகளில் உண்டாகும் சிறு விபத்துக்கள் குறித்தும் முன் எச்சரிக்கையாகச் செயற்பட்டால் பலவகையான பாதிப்புகளையும் அவற்றால் விளையும் கஷ்டங்கள், துன்பங்களையும் தடுத்துக் கொள்ளலாம். அது மக்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. தம்மையும் சமூகத்தையும் காப்பாற்றும் பொறுப்புணர்வு அதற்கு மூலாதாரம். அது மக்களிடையே வளராவிடில் சமூகத்தளத்தின் சகல துறைகளும் மெதுமெதுவாக அரிக்கப்பட்டுவிடும்.

---

★ யாழ் ஆஸ்பத்திரிக்குரிய

# 15 கோடி ரூபா வைத்திய உபகரணங்கள்

# வெலிசறை களஞ்சியத்தில் தேக்கம்

கொழும்பு, ஜூன் 2

யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 15 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி வாய்ந்த வைத்திய உபகரணங்கள் சுங்கத் திணைக்களத்தின் அனுமதியை எதிர்பார்த்து சுகாதார அமைச்சின் பண்டகசாலை ஒன்றில் பல மாதங்களாக தேங்கிக்கிடக்கின்றன.

அதிகாரிகளை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' இத்தகவலை வெளியிட்டுள்ளது

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் 25 கொள்கலன்களில் எக்ஸ்றே இயந்திரங்களும் சத்திர சிகிச்சை உபகரணங்களும் கொண்டு வரப்பட்டன என்றும்—

வடக்கு — கிழக்கு புனரமைப்புவேலைகளுக்காக பிரிட்டன் உறுதியளித்த 2 கோடி ஸ்டேர்லிங் பவுண் உதவியின் ஒருபகுதியாக இவ்வைத்திய உபகரணங்கள் கொண்டு வரப்பட்டன என்றும்கொழும்பில் உள்ள பிரிட்டிஷ பிரதித் தூதர் றொனால்ட் நாஷ் தெரிவித்தார்.

### 25 கொள்கலன்களில் வந்தவை

சுகாதார அமைச்சுச் செயலாளர் ஜோ பெர்னாண்டோ தகவல் வெளியிடுகையில்—

வைத்திய உபகரணங்களுடனான 25 கொள்கலன்களும் வெலிசறையில் உள்ள சுகாதார அமைச்சின் பண்டகசாலையில் தற்போது வைக்கப்பட்டிருப்பதாகவும்—

இவற்றை சுங்கத்திணைக்களத்தினர் சோதனை செய்து அனுமதி வழங்கிய பின்னர் அவை யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

**அமைதி திரும்பினால்**

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் அமைதி திருப்பியதும் பிரிட்டிஸ் அரசின் உதவி அதிகரிக்கப்படக் கூடும் என்று பிரிட்டிஸ் ராஜதந்திரி தெரிவித்தார்.

தற்போது பிரிட்டிஷ் உதவியின் பெரும்பகுதி தென்பகுதிக்குச் செல்வதாகவும்—

இயல்பு நிலை ஏற்பட்டதும் வடக்கு—கிழக்குக்கு உரிய பங்கு கிடைக்கும் என்றும் அந்த ராஜதந்திரி சொன்னார்.

பிரிட்டனைச் சேர்ந்த தொண்டர் நிறுவனங்களான ஒக்ஸ்பாம், குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் ஆகியன பாதிக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுவதாகவும்—

புனர்வாழ்வுப் பணிகளில் தீவிரபங்கெடுக்க பிரிட்டன் விரும்புவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை—

25 கொள்கலன்களில் கொண்டு வரப்பட்ட வைத்திய உபகரணங்கள் யாழ்ப்பாணப்பகுதியின் தேவைக்கு அதிகமாக இருப்பதாகவும் எனினும் இந்த உபகரணங்கள் இறுதியில் விடுவிக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்

என்று ''சண்டே ரைம்ஸ்'' தெரிவித்தது.

**சிறந்ததாக மாற்றுமாம்**

இந்த வைத்திய உபகரணங்கள் யாழ். போதனா ஆஸ்பத்திரியை இலங்கையிலேயே மிகச் சிறந்த தொன்றாக மாற்றும் என்றும்—

தீவிரவாதிகள் இதனைத் தவறாகப் பயன்படுத்தக்கூடும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

இப்பிரச்சினைகள் தான் பிரிட்டிஷ் தூதரகத்துக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்படக் காரணமாக இருந்தன என்றும் அந்தப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி குறிப்பிட்டார்.

—இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்'' தெரிவித்தது.

## 5ஆம் கட்டமாக ம. எண்ணெய்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் சென்ற வெள்ளிக்கிழமை முதல் ஐந்தாம் கட்டமாக ஒரு லீற்றர் மண்எண்ணெய் 15ரூபாவாகவும், 1கிலோ சீனி ரூபா 27-80 சதமாகவும், வொண்டர்லைட் சவர்க்காரம் ரூபா 5-65 சதமாகவும் விநியோகிக்கப்படுகின்றன.

இதே வேளை இடம் பெயர்ந்தவர்களுக்கான மே மாத முதல் இருவாரங்களுக்கான உலர் உணவு முத்திரைகளுக்கும் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(இ-162)

## தமிழக விடுதலைப் படையின் தலைவர் சுட்டுக் கொலை?

சென்னை, ஜூன் 2

''தமிழக விடுதலைப்படை'' என்னும் தீவிரவாத இயக்கத்தின் தலைவரான நாகராஜன் என்பவர் நேற்றுக் காலை தமிழ்நாடு பொலீஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டார் — என்று அறிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்று வந்த வன்செயல்களில் இவர் தொடர்பு கொண்டிருந்ததாக சந்தேகிக்கப்பட்டது. அச்சம்பவங்கள் தொடர்பாக அவர் தேடப்பட்டு வந்தார்.

திண்டுக்கல் - அண்ணா மாவட்டம் அருகே வேடசந்தூர் அருகே உள்ள குளத்தூர்க் கிராமத்தில் நேற்று அதிகாலை மாவட்ட பிரிவு பொலீஸுடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் நாகராஜன் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

நாகராஜன் நவீன ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளைக் கையாளுவதில் விடுதலைப் புலிகளிடம் பயிற்சிபெற்றவர் என்றும்—

இப்பயிற்சிக்காக பல முறை யாழ்ப்பாணத்துக்கு அவர் சென்று வந்தார் என்றும் செய்திகள் தெரிவிப்பதாக இந்திய வானொலி அறிவித்தது

[உ-எ-க]

## சு.கவை புனரமைக்க சிறப்புச் செயலர்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் புனரமைப்பதற்காக சிறப்புச் செயலாளர் ஒருவரை கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமித்துள்ளார்.

தமக்கு நெருக்கமான கேணல் அனுருத்த ரத்வத்தையையே அவர் இப்பதவிக்கு நியமித்திருக்கிறார்

இதற்கிடையில் —

தனக்கு எதிராக கட்சியினால் மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கை விசாரணையை இடைநிறுத்தக் கோரி ''ஹெல உறுமய'' குழுவைச் சேர்ந்த திலக் கருணாரத்ன தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் நிராகரித்திருக்கிறது. [உ 6]

## விளையாட்டு நிகழ்வுகள்

சுன்னாகம் பயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் — 9 பேர் பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டு மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 30 மணி:- சுன்னாகம் மின்னல் வி.க. அணி எதிர் சுன்னாகம் யோகஸ்ரார் வி. க அணி.

★ மாலை 4.30 மணி:- அளவெட்டி விநாயகர் வி.க. அணி எதிர் சுன்னாகம் ஸ்கந்தா ஐ. வி. க. அணி.

(உ-89)

o o o

அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்டு வந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று இரவு 7 மணிக்கு மின்னொளியில் நடைபெறும். இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே. கே. எஸ். அணி மோதும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சம்மேளனத் தலைவர் கப்டன் டி.ஏ.எம். குணசிங்கமும் பங்கு பற்றுவர். (உ-17)

o o o

யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இடைப்பட்ட உதைபந்தாட்டப் போட்டித் தொடர், புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் பிரதேச செயலர் பிரிவு அணிகள் வருமாறு:-

பிற்பகல் 3.00 மணி:- [illegible] எதிர் சங்கானை.

மாலை 4.00 மணி:- சண்டிப்பாய் எதிர் கரவெட்டி.

---

**அருவத் .**

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு அராலியூர் ஆச்சாரியர் அமரர் திரு. ந. வைரவநாதர் தலைமையில் மீண்டும் தொடர்ந்து நடைபெற்று இன்று நிறைவு பெறுகின்றது.

இத்திருப்பணியானது கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம் ஆகிய இரு பகுதிகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது. மேலும் மகா மண்டபம், நிர்த்த மண்டபம் ஆகிய மண்டபங்களும் தொடர்ந்தும் கருங்கல்லினாலேயே அமைக்கப் பெற்று வருகின்றன மேலும் இத்தொடர் திருப்பணியானதும் கூடிய விரைவில் நடைபெற வேண்டும் என அம்பிகையின் பாதாரவிந்தங்களை பிரார்த்தித்து எமது நாடும், மக்களும் சுபீட்சம் பெற்று தமிழ் மக்கள் இன்புற்று வாழ ஆவரம்பிட்டி அம்பிகை அருள வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

''மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.''

★

## ஆலய உற்சவங்கள்

கோண்டாவில் கிழக்கு திருவருள்மிகு ஸ்ரீஞானப்பழனி முருகன் தேவஸ்தானத்தின் தேர்த்திருவிழா இன்று காலையும், தீர்த்தத் திருவிழா நாளையும் நடைபெறும்.

o o o

அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் நாளை பிற்பகல் 3 மணிக்கு முருகப் பெருமானுக்கு விசேட அபிசேக பூசை ஆராதனையும் 4 மணிக்கு சண்முகார்ச்சனையும் நடைபெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி உலவருதல் இடம்பெறும். (க)

o o o

புலோலி உபயகதிர்காமநாதன முருக மூர்த்தி கும்பாபிசேகம் நாளை வியாழக்கிழமை காலை 6 மணிக்கும 6 45 க்கும் இடையில் நடைபெறும்.

மாலை 6. 30 மணிக்கு சண்முகார்ச்சனையும 7 மணிக்கு திருக்கல்யாணம் வீதியுலா ஆகியனவும் இடம் பெறும் (த-ப)

o o o

கொழும்புத்துறை மேற்கு வதிரி பிட மணறுளாடும் ஸ்ரீ விநாயகமூர்த்திப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தச் சப்பறத்திருவிழா இன்று இரவு ஏழுமணியளவில் இடம் பெறும். (உ-162)

o o o

அளவெட்டி வடக்கு ஸ்ரீ ஆதவீரபத்திர சுவாமிகள் கும்பாபிடேக விழா நாளை காலை 6 மணிக்கு அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

அதனையொட்டி விசேட பூசை வழிபாடுகளும் இடம் பெற இருக்கின்றது. (உ-51

o o o

நாகேஸ்வரம் அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை வியாழக்கிழமை வைகாசி விசாகவிழா சிறப்பாக நடைபெறும்.

o o o

கோண்டாவில் உப்புமடம் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் ரதோற்சவம் இன்று காலை இடம்பெறும்.

o o o

தெல்லிப்பளை கோவிற்புலம் அன்னமார் சிவன் ஆலயத்தில் வைகாசிப் பெரும் பொங்கல் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரவும் அடுத்தநாள் சனிக்கிழமை காலையும் நடைபெறும்.

o o o

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நளை பிற்பகல் 3 30 மணிக்கு தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் இடம் பெறும்.

இன்று சப்பறத் திருவிழாவைத் தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு கானகலா வாரிதி வை. நித்தியானந்த சர்மா ''பார்வதி கல்யாணம்'' என்னும் பொருளில் சங்கீத கதாப் பிரசங்கம நிகழ்த்துவார்.

[உ 10]

o o o

இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தெய்வீக இசை அரங்கில் இன்று பிரபல நாதஸ்வர வித்துவான் வி. கே. பஞ்சமூர்த்தியின் புல்லாங்குழல் கச்சேரி இடம்பெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் நல்லதம்பி

(பிரபல வர்த்தகர், யாழ். நகர், திருமலை)

புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மாணிக்கம் நல்லதம்பி அவர்கள் 20-4-93 அன்று திருகோணமலையில் காலமானார். அன்னார் முன்னாள் ஊராட்சிமன்ற உறுப்பினரும், சமூகத் தொண்டருமான அமரர் ஆ. மாணிக்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அருமை மைந்தரும், காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், திரு. கோபால பிள்ளை (ஜேர்மனி) அவர்களின் அருமைத் தந்தையும், சந்திராவின் அன்பு மாமனாரும், உமாசங்கர், ஷர்மிளா (ஜேர்மனி) ஆகியோரின் அருமைப் பேரனாரும் —

யாழ். நகர் பிரபல வர்த்தகர்களான காலஞ்சென்ற ஆறுமுகம், மற்றும் அம்பலவாணர், அருணாசலம், பரநிருபசிங்கம், சுந்தரிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற திரு - திருமதி நல்லதம்பி (ஆசிரியர்) அவர்களின் மருமகனும், காலம் சென்றவர்களான நாகாத்தைப்பிள்ளை (அமிர்தப்), திருவார்த்தைப்பிள்ளை, இராசம்மா, பரமேஸ்வரி (கொழும்பு), திரு. நடராஜா, ந. சிதம்பரப்பிள்ளை (பட்டயக் கணக்காளர், மத்தியகிழக்கு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி ஜெ. நாகம்மாவின் அருமைத் தாய்மாமனாரும், காலஞ்சென்ற திருமதி புவனேஸ்வரி துரைசிங்கம் (ஆசிரியை) சகோதரர்கள், திரு. அ. சிவசாமி (தொழில்நுட்ப உதவியாளர், கல்முனை) சகோதரர்கள், திருமதி க. மனோன்மணி, திரு. ப. தவயோகராஜா (வர்த்தகர் கொழும்பு) சகோதரர்கள் ஆகியோரின் அருமைச் சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21 - 4 - 93 இல் திருமலை, நிலாவெளியில் நடைபெற்றன என்பதை மிக்க துயரத்துடன் அன்னாரின் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

குறிப்பு: அன்னாரின் 45 ஆவது நாள் ஆத்மசாந்தி கிரியைகள் எமது இல்லத்தில் 3-6-93 வியாழன் காலை நடைபெறும். தயவு செய்து அனைவரும் சமுகம்தந்து அன்னாரின் ஆத்மசாந்தி அடைய பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்:
டாக்டர் ஆ பேரின்பநாதன்
திரு. அ. சண்முகராஜா
(யாழ். வர்த்தகர்)
(பெறா மக்கள்)

767, மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடத்தடி,
யாழ்ப்பாணம்.

(25935)

## வீ. நாகராசா

(காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

கொக்குவில் மேற்கு மணியர்பதியை பிறப்பிடமாகவும், தலையாளியை வசிப்பிடமாகவும் கொண்ட வீ. நாகராசா 01-06-93 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற விசுவரெத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், கரம்பன் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் மருமகனும், பாலசரஸ்வதியின் அன்புக் கணவரும், வித்தியா (லண்டன்), ராதை (சுவிஸ்), பாரதி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீராமலிங்கதுரையின் (சுவிஸ்) அருமை மாமனும், அருந்தவநாயகி, செல்வநாயகி, யோகராணி, ஜீவநாயகி ஆகியோரின் அன்பு அண்ணரும், பராசக்தி, இளையதம்பி (லண்டன்), வாமதேவன் (லண்டன்), கிருபாம்பிகை முத்துக்குமாரசாமி (கனடா), காலஞ்சென்ற சிவகாமசுந்தரி கந்தையா, ஸ்ரீஸ்கந்தராசா (கனடா), பஞ்சலிங்கம், த. சண்முகலிங்கம் (தட்டெழுத்தாளர் வ. பி. போ. ச. கோண்டாவில்), சண்முகநாதன் (சுவிஸ்), கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற குமாரசாமி (உடுவில்), S. வேலாயுதபிள்ளை (Retired, R.FO) ஆகியோரின் அன்பு மாமனாரும், மண்டைதீவு பொன்னுத்துரை தம்பதிகளின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து இன்று (02 - 06 - 93 ல்) புதன்கிழமை பி ப. 1மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
நா. பாலசரஸ்வதி
(மனைவி)

50, சபாபதி வீதி,
யாழ்ப்பாணம்.

(25934)

## பெரியதம்பி மகாலிங்கம்

சாவகச்சேரி முன்னாள் லிங்கம் ஸ்ரோஸ் உரிமையாளர் பெரியதம்பி மகாலிங்கம் 01 - 06 - 1993 நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக்கணவரும், ச. ஜெகசோதிநாதனின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (02 - 06 - 1993) பி. ப. 3 மணிக்கு நாயன்மார்கட்டு இராசேஸ்வரி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. நாகம்மா
(மனைவி)
ச. ஜெகசோதிநாதன்
(பெறாமகன்)

இல: 103 இராசேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு.

[25936]

# மொழி வினைத்திறன் பெருக்குவதில் எழுத்துப் பெயர்ப்பு முக்கிய பங்கு

## நினைவுப் பேருரையில் கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 2

''தமிழ் மொழியின் நடைமுறைத் தேவைகளையும் வினைத்திறனையும் பற்றி நாம் அக்கறை காட்ட வேண்டும். எமது மொழியின் வினைத்திறனைப் பெருக்கும் பணியில் எழுத்துப் பெயர்ப்பும் முக்கிய பங்கு வகிக்கின்றது.''

காலஞ்சென்ற யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் நினைவுப் பேருரையை நிகழ்த்திய போது யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் திரு. ஆர். முருகையன் இவ்வாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை பிற்பகலில் நடைபெற்ற இந்த நினைவுப் பேருரை நிகழ்ச்சிக்கு யாழ். பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் கே. மகேஸ்வரன் தலைமை வகித்தார்.

திரு. முருகையன் ''தமிழில் வழங்கும் எழுத்துப் பெயர்ப்பு முறைகள்'' எனும் பொருள் பற்றி நிகழ்த்திய நினைவுப் பேருரையில் மேலும் கூறியதாவது.

பிறமொழிகளிலிருந்து எழுத்துப் பெயர்க்கும்போது (Transliteration) மூலமொழியின் உச்சரிப்புடன் மிகவும் நெருங்கிவரத் தக்கதாக அதைச் செய்ய வேண்டும். தற்போது வழக்கில் உள்ள எழுத்துப் பெயர்ப்பு முறைகளிலான குறைபாடுகளை நீக்க நாம் வழிகளைக் காண வேண்டும். பிறமொழிகளின் ஒலி வடிவங்களைக் கூடியளவு தமிழுக்குக் கொண்டுவரக் கூடிய புதிய எழுத்துப் பெயர்ப்பு உத்திகளை அறிமுகம் செய்ய வேண்டும்.

வேற்று மொழிச் சொற்கள் என்ற காரணத்தால் காலங்கடந்த காலத்தில் தமிழ் மொழிக்குள் கலந்து கொண்ட சொற்களைக் களைய முயற்சிப்பதும் வறுமையையும் வெறுமையையும் ஏற்படுத்தும். இப்படி அவர் கூறினார்

திரு. முருகையன் எழுத்துப் பெயர்ப்பில் புதிதாகப் பயன்படுத்த வேண்டிய சில முறைகள் பற்றிய ஆலோசனைகளையும் இந்த விரிவுரையில் முன்வைத்தார்.

திரு. முருகையன் பேராசிரியர் வித்தியானந்தன் பற்றிக் குறிப்பிடுகையில் 'அவர் தமிழரின் கலைகளிலும் பண்பாட்டிலும் சமூக அரசியமேம்பாட்டிலும் அக்கறை கொண்டிருந்தார். தமிழ் மக்களின் வாழ்வும் வளமும் மேம்பாடுமே அவர் நாடிய குறிக்கோள் ஆகும்'' என்று கூறினார்.

நன்றியுரை நிகழ்த்திய கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை 'பேராசிரியர் வித்தியானந்தன் தமிழரின் பல்துறை வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியவர்'' என்று பாராட்டினார்.

பேராசிரியர் வித்தியானந்தன் குடும்பத்தினர் வழங்கிய பணத்தைக் கொண்டு நிறுவப் பட்ட அறக்கட்டளையின் பேரால் இந் நினைவுப் பேருரை ஆண்டு தோறும் நடைபெற ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. (க)

## விசாரணை நடத்தக் கோரிக்கை

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் கீழ் இயங்கி வந்ததும்—

ஜனாதிபதி யாக விஜேதுங்கா நியமிக்கப்பட்டதை அடுத்து கலைக்கப்பட்டதுமான இரகசிய பொலீஸ் சேவை பற்றி முழுமையான விசாரணை நடத்த நாடாளுமன்ற தெரிவிக் குழு ஒன்றை அல்லது ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றை நியமிக்கும் படி எதிர்க்கட்சிகள் கோரவுள்ளன.

இது தொடர்பான பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்க உள்ளதாக அறியவருகிறது.

## தென்மாகாண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரைட்டர் திலகசேகரா ஐ.தே. கவுக்கு ஆதரவளிக்க முன் வந்திருக்கிறார் என்ற ஊகத்தை அவர் மறுத்துள்ளார்.

எனினும் —

தென் மாகாண முதலமைச்சர் அமரசிறியுடன் அவர் காரில் சென்று ''குளோசன் பேர்க்'' ஹோட்டலில் மதிய போசனம் சாப்பிட்டார் என்றும் —

பின்னர் முதலமைச்சருடன் மாகாண ஆளுநர் பாக்கீர் மாக்கரைச் சந்தித்தார் என்றும் சொல்லப்படுகிறது.

இவற்றை மறுக்கும் திரு. திலகசேகரா, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு விசுவாசமாக நடப்பேன் என்று சத்தியக் கடதாசி அளித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபையின் தவிசாளராக திரு. திலகசேகராவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி நிர்வாகம் முன்வந்துள்ளது என்றும் கூறப்படுகிறது. [உ-ஏ]


# அனைவரையும் அழைக்கின்றோம்

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன், யாழ்ப்பாண மாவட்டச் சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் 93 ஜூன் 04 ஆம், 05 ஆம், 06 ஆம் திகதிகளில் நடத்தப்படுகின்ற ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப் படம், சித்தமருத்துவக் கண்காட்சியின்,

தொடக்க விழாவிற்குத் தங்களை அழைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இடம்:- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம்:- 93 ஜூன் 04 வெள்ளிக்கிழமை
நேரம்:- காலை 9.00 மணி
பிரதம விருந்தினர்:- திரு சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் (பொறுப்பாளர், அரசியல்துறை)

பிரவேசம் இலவசம்

தமிழ் அபிமானிகள் அனைவரையும் வருக, வருக, என அன்புடன் அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர்
சம்மேளனம்

(ஈ/105)


# மரண அறிவித்தல்கள்

## பாக்கியநாதர் யோசேப்

(செல்வராசா)

[முன்னாள் உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை]

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பா. யோசேப் நேற்று (01 - 06 - 93 இல்) காலமானார்.

இவர் நாகம்மாவின் (காந்திமலர் - பருத்தித்துறை, முன்னாள் உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், செல்வதயாள றூபன், அன்ரன் செல்வதயாளன், றெஜினோல்ட் செல்வகுணாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அரியலாவின் (நாகராணி) அன்பு மாமனாரும், சைலஜனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (02 - 06 - 93) பி. ப. 3 மணிக்கு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
குடும்பத்தினர்

44, மூன்றாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[25934]

## Primrose Pathmathevi SabaPathipillai (Ranee)

சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி சபாபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மகள் ராணி நேற்று மறுமைக்குள் பிரவேசித்து விட்டார்.

இவர் டெய்சி ராஜேந்திரா (U.K), காலஞ்சென்ற ஜோர்ஜ், ஜெயம் (Australia), குலம் (U.K), காலஞ்சென்ற பாலா, செல்வா (கொழும்பு), ராஜேந்திரா, சகுந்தலா, விமலா (ஆசிரியை, டிறிபேக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜரீன், தவம், காலஞ்சென்ற கரியற்ஜீன், லில்லி, காலஞ்சென்ற பிரின்ஸ், ராஜேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று புதன்கிழமை [02-06-93] பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சாவகச்சேரி கிறிஸ்தவ மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

கண்டி வீதி,
சாவகச்சேரி.

[25938]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org